## 11.5 1998–99–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிப்பதற்கான வழி முறைகள்.

ஊரக வளர்ச்சி துறை

அரசாணை (நிலை) எண். 136 நாள் : 3.7.1998

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண். 37236/98/கு.வ, நாள் 1.5.98,
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண். 37181/98/ஊ.அ(ம)நி.2

**ஆணை**

1998 – 99 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.75.5428 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் ஆய்வு செய்யப்பட்டு, சமன்பாடு மற்றும் ஊக்கத் தொகையான ரூ.75.5428 கோடியினை கீழ்க்கண்டவாறு ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடுகிறது.

| | I. சமன்பாட்டு நிதி | ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி (ரூபாய் கோடியில்) | ஊராட்சி ஒன்றியங்கள் |
|---|---|---|---|
| 1. | குடிநீர்:<br>(அ) வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகள் குடிநீர் கட்டண தொகையினை செலுத்த வழி வகை செய்ய மாவட்டத்திற்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ஒதுக்குதல் | 2.80 | –– |
| | (ஆ) நலிந்த ஊராட்சிகளில் குடிநீர் வசதியினை செய்து தர கைப்பம்புகள் / விசைப்பம்புகள் / புதிய குழாய் தொடரமைப்புகள் போன்ற பணிகள் செய்தல் | 12.20 | –– |
| 2. | தெருவிளக்கு மற்றும் மின்கட்டணம்:<br>(அ) வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டண தொகையினை செலுத்த வழி வகை செய்ய மாவட்டத்திற்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ஒதுக்குதல் | 2.80 | –– |
| | (ஆ) முழுமையான தெருவிளக்கு இல்லாத குடியிருப்புகளுக்கு 30,000 தெருவிளக்குகள் அமைத்தல் (தலா ரூ.4200 வீதம்) | 12.60 | –– |
| | (இ) 10,000 குழல் விளக்குகளை உயர் அழுத்த சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றி அமைத்தல் (தலா ரூ.2650 வீதம்) | 2.65 | –– |
| 3. | உள்ளமைப்புகள், வசதிகள் மற்றும் பிற பணிகள்:<br>(அ) சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் பயணம் செய்யும் நகரமைப்புக்களை ஒட்டியுள்ள, மலை மற்றும் கடலோர பகுதிகளைச் சார்ந்த ஊராட்சிகள் மறறும் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான அடிப்படை வசதிகள் செய்ய நிதி ஒதுக்கீடு செய்தல் | 3.00 | 8.5268 |
| | (ஆ) 50 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரக சந்தைகளை மேம்படுத்துதல் (தலா ரூ.5 இலட்சம் வீதம்) | –– | 2.50 |
| | II. ஊக்க நிதி:<br>ஊராட்சிகளில் வீட்டு வரி வசூல்களுக்கு ஈடான இணை மான்யம் | 28.4660 | –– |
| | | **64.5160** | 11.0268 |
| | **மொத்தத் தொகை** | **75.5428** | |

3. மேலே பத்தி 2–ல் கூறப்பட்டுள்ள இனம் (1) (அ) மற்றும் இனம் (2) (அ), (ஆ) மற்றும் (இ) கண்டுள்ள தொகையினை ஊரக வளர்ச்சி இயக்குநரால் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தவும், இனம் 1 (ஆ)–வில் கூறப்பட்டுள்ள தொகையினை மாவட்ட ஆட்சியர்கள் பெற்று நலிவுற்ற ஊராட்சிகளுக்கு மட்டும் அத்தொகையினை பயன்படுத்தவும், இனம் 3 (அ)–வில் கண்டுள்ள தொகையினை சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்ரீகர்கள் அதிகமாக பயணம் செய்யும் நகரமைப்புகளை ஒட்டியுள்ள, மலை மற்றும் கடலோர பகுதிகளைச் சார்ந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொத்துகளை ஏற்படுத்தவும் மற்றும் சாலை / பொது சுகாதார வசதிகளடங்கிய அடிப்படை வசதிகளை செய்யவும் மற்றும் அவற்றை மேம்படுத்தவும் போதிய கருத்துருவினை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெற்று நிதி ஒதுக்கீடு செய்யவும், ஊராட்சி ஒன்றியங்களின் மேம்படுத்த வேண்டிய 50 ஊரகச சந்தைகளை தேர்வு செய்து இனம் (3) (ஆ) வில் கண்டுள்ள தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு வழங்கிடவும், இனம் II ல் கண்டுள்ள ஊக்க நிதியினை 1997–98 ம் ஊராட்சிகளால் வீட்டு வரியாக வசூல் செய்யப்பட்டதற்கு இரண்டு மடங்கு ஈடாக (இணை மான்யம் : 2 வீட்டு வரி வசூல் 1) ஊராட்சிகளுக்கு வழங்கிடவும், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரங்கள் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. ஆணையிடப்படட இச்செலவினமான ரூ.75,54,28,000/– (ரூபாய் எழுபத்து ஐந்து கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 200 ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் I, திட்டத்தில் சேராதது – BB, மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதியொதுக்கம்–09. உதவி மானியங்கள் (DPC 3604 00 200 BB 0909)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 2276/FS/B/98, நாள் 8.6.98–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்